உ



யாழ்ப்பாணம்

தெல்லிப்பழை - மயிலிட்டி

இருமரபுந்தூய்ய

உயர்சைவ வேளாண் குலதிலகர்

# திரு. இலங்கைநாயகம் சுப்பிரமணியம்

கூட்டுறவுச்சங்கப் பரிசோதகர் (உயர் பதவி)

அவர்கள் யாக்கை மறைவு குறித்த

# நினைவு மலர்

## 09. 10. 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தோற்றம்:**
**2-5-25**

**மறைவு:**
**24-9-88**

## திரு. க. இ. சுப்பிரமணியம்

கூட்டுறவுச்சங்கப் பரிசோதகர் (உயர்பதவி)

### திதி வெண்பா

சீரார் விபவத்துச் சேர் சதயம் தன்னிலே
ஏரார் திரயோதசிப் பூர்வம் - பேரார
மன்னு சுப்பிரமணியர் மாண்புடனே நீங்கியப்
பொன்னுலகு சென்றிட்ட நாள்.

9-10-88

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபு கிளத்தல்

யாழ்நகர் போற்றுதும் யாழ்நகர் போற்றுதும்
'ஷெல்'வந் துற்றிடச் செல்லா தெங்கும்
புலம்பிரிந் துறையாப் பண்புடை யாளர்
பதிஎழு வறியாப் பழங்குடி மக்கள்
என்றும் வாழூமூர் நம்மூர் ஆதலின்
ஈங்கே,
மன்ளர் குழாஞ்சூழ் மயிலிட்டி தன்னில்
பள்ளந் தரையெனப் பொய்யாப் பலிக்கும்
போக பூமி, புன்செய் நன்செய்
வான்பயிர் பலவும் ஓங்கி நிற்கும்.
இதுவே யீண்டு ராச்சியத் தவரின்
விமான ஏறுதுறை எனப் பெயரிற்று
ஆண்டிரு நூற்றிற் கப்பாலாய
காலக் கதையிது கேண்மோ! இலங்கை
நாயக முதலி என்றொரு வள்ளல்
வழிவந்த காசி நாதர் சிற்றம்
பலத்தார்க் கொரு மகனுர் கந்தைடா
கந்தப் புராணம் உரைவகுத் துரைக்கும்
உரிமையாளன், பேர் போகிய வரன்,
உரிய காலத் துத்தமி தங்க
முத்துவை மணந்து எத்தாலு நல்ல
இருவர் மகாஅர் ஈன்றெடுத் தனரே,
இலங்கை நாயக மெனமரபுப் பேரும்
நாவுக் கரசெனு நம்பி பேரும்
இசைபெற இட்டு நசையி வாழ
தெல்லியம் பதியில் தூர்க்கா தேவி
ஆலய முகாமை கதிரேச வுடையார்
வழிவழி வந்த வன்னித்தம்பி
தன்மகள் பார்வதிப் பிள்ளை தன்னை
வதுவை புரிந்தே வாழுங் காலே,
மாணிக்கவாசக முதல்வனுமவன்பின்
மகேஸ்வரி தேவி நல்லாளு மாகவே
தோன்றினரே.
அதன் பின் ஆங்கே சுப்பிரமணியக்
குரிசிலும் கதிர் காம லிங்கரும்
முருக னருளால் திருவொடு தோன்றினர்.
இவர்க்கு நேர்த்திகள் இருமுது குரவரும்
பெரும்பொருள் போக்கி, காசி கதிர்காமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளொடு கூட்டிய தேவ பிரதிட்டை,
குடுமி நீக்கல், கோயிற் பிரதிட்டை,
என்றெலாம் செய்து தோஷம் நீக்கி
இனிதுற வாழுங் காலை. அப்பா
மானிப்பாயில் உயர் நிலைக் கல்லூரி
தணையினி விடுத்து, வீட்டுட னிருக்க
முனைந்தன ராயினும் சின்னாள வதியில்
சிவபத மடைய மனைவியு மவ்வண்
கணவர்த் தொடர மூத்தோன் "தம்பியும்"
அவர்தம் தங்கையும் இளையோ ரிருவரை
இயக்கி நல்வழி, மயக்கில் தொடரல்
உயர் கலையீட்டம் எல்லாம் கண்டு
கவலைகள் களைந்து படிப்படி ஏற,
என்னே நியதி! என்னே வாழ்வு!
என்றே சுற்றம் சூழல் அரற்றவும்
ஆங்கே,
சட்டத்தரணி அண்ணனும் அவர்தம் தங்கையும்
அடுத்தடுத் தேகினர் பெற்றோர் வழியே!
ஐயகோ! வென்னக் கவலும் குடும்பம்
சிறிது கவலை உறுத்தா தகல,
தாய்வழி மைத்துனர் தாயும் தந்தையும்
அண்ணனும் அக்காளும் அரும்பெருஞ் சுற்றமும்
(வன்னியர் பெருந்தகை)
தானே ஆமெனத் தனித்துணை யாயினர்.
சகோதர ரிருவரும் தத்தம் இயல்பில்
இந்து, பரமேஸ்வரா இரண்டிலுமாக
கற்றுத் தேறி மற்றோ ருதவி
வேண்டா வண்ணம் வெளியுல கதனில்
வெவ்வேறு பதவியில் வீற்றிருந் தனரே.
இனி,
ஆகூழ் வந்து அணைக்குங் காலை
ஆர்வலர் தடுத்து நிறுத்தலு மாமோ!
வன்னியர் மனையாள் கோமதி: தங்கை,
அகிலா; ஆங்கே; அவவும் இருந்தா;
மணியரும் மனையாள் இவளே தகுமென
வரித்தார் விரைந்தார்
இருவரு மாறி இதயம் புக்கனர்
ஆங்கிது நடந்து நாற்பதி யாண்டு
தனிமனைபுக்கார் குடித்தனம் நடாத்த
இனி ஒருக்காலிம் மலரிணைப் புரட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசிப் பக்க வமிசக் கொடியினைக்
காண்பீராக! கண்டதென்னே!
ஆங்கே அதனுல்
தோன்றின ரனைவரும் தேவியி னம்சம்
நாமிசைப் பாவையின் நடனங் காண
"அப்பா" சிறிது தரித் திருந்தாலும்
தப்பா திதனைத் தரிசித் திருப்பார்!
மூத்தபிள்ளை பவானி முன்னமே மணந்து
தாரமாய்த் தாயாய்த் தலையாளு மாகி
தாய் நாடதனில் தொழில்புரி கணவர்க்
குறுதுணை யாகவும் தங்கை நல்லார்
தாங் கற்றுத் தேறவுமுதவி தந்து
வணிகத் துறையில் பட்டம் பெற்ற
கௌரியை ஏலவே ஊருக் கனுப்பி
ஈற்ருேர் மாலினி காயா இருவருஞ்
சென்று கற்கும் வசதிகள் கண்டனர்
இவர்தாம் இலேசில் முடித்து உரிய
பட்டமும் பெற்ற பின்னர் தத்தந்
துறையில் அடுத்த படியேறத் தாண்டவும்
தொடங்கி ஆற்றுங் காலை பேற்றில்
முதலிடம் பெற்ற காயா பரிசுடன்
படிக்கும் பாக்கியம் பெற்ற னளன்றே.
அதனுற் பெருமிதங் கொண்டன ரனைவரும்
இருந்துமென்?
"எப்பவோ முடிந்த காரியம்," என்று
மகான் எம்யோகர் மறுத்து மறுத்துச்
சொன்னதை நாமும் சுகமாய் மறந்தோம்
விதியினை நொந்து வீணே அரற்றல்
நமக்கும் யார்க்கும் நன்றே யன்ருே!
நம்பி! நங்காய்! இன்னுங் கேளாய்,
நீஉடம்பே யன்று மனமும் அன்று,
புத்தி சித்தம் அவையும் அன்று,
நீயே ஆன்மா! அதற்கோர் அழிவிலை!
மகான்கள் கூறும் அனுபவ சித்தாந்தம்
உண்மை இதனை உள்ளத்தே பதி,
அங்கே நித்திய ஆனந்தம் காண்பாய்.
மணியரும் ஆங்கே கலந்த பண்பே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறுதிமொழி

பரந்தாமன் கூறுகிறுன்:- அருச்சுனு! இதோ போர்க்களத்தில் சதுரவியூகமாக நிற்கும் போர்வீரர் ஒருவர் தவருமல் எல்லோரு மே இறக்கப்போகிறுர்கள். உன்னுடைய தொழிற்பாடுமே இங்கு தேவைப்படாது.

பகவத்கீதை xi சுலோ 32

சுபம்.

## நேருக்கு நேர்

1. இஞ்சேபார் என்தம்பீ! என்றும்போல் பேசுகின்றேன்
நெஞ்ச மகலா நறும்வார்த்தை - கொஞ்சம்
தரித்துநின்று நாஞ்சொல்லும் வெண்பா ஒருக்கால்
சிரித்து நின்று கேளாய் சிறிது.

2. குண்டெறிவான் போகாதே! கண்ணிவெடி கூடவே
மண்டிக் கிடக்கும் வழிவழியே - திண்டாட்டம்
நடராசர் பாதமென்ருல் நான்வாறேன் நில்லேன்
விடுவிடெனப் போகலாம் விரைந்து.

3. நடராசர் பாதமலர் நல்விருந்தா யாகும்
விடவும் மனமில்லா இன்பங்காண் – அடடா!
நிதமும் இருந்துகொண்டு சிந்தை யடக்கல்
இதமாகும் என்றென் றறி.

4. எல்லாம் மயக்கம் எதுவுமே உண்மையில்லை
வல்லான் ஒருவனே உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி கூறல்

இன்பிலும் துன்பிலும் நானெடுத்த பங்கெல்லாம் போதர்தோ
அன்பாய் நீர் அளித்திட்ட வாக்கெல்லாமின் றவமாமோ
என்பாயுருகி எரியாயெரியேனோ இனியெங்கே
என்றென்றோ அப்பாவுமை நான்கண்டெனுளம் ஆறுவதே.

## பிள்ளைகள்

உற்றாரும் உரியவரும் நின்றிசைக்க நீரெமக்கு
கற்றார்வம் பெருக்கியல்லால் மற்றார்வம் வேண்டாமென்று
நற்கூற்றுத் தந்துதவி நன்றாகத்தூண்டி விட்டீரென்றே
பெற்றாருட் பெரியவரே ஈண்டு எற்றிற்குச் சென்றீரே.

## சுற்றத்தார்

பிள்ளைகளின் பாசுகண்டு பின்சென்றால் பிந்துமே
அள்ளி அவர்மேலே பொழிந்திட்ட அன்பெலாம் பொய்யோ
கிள்ளிக் கொஞ்சப் பேரக்குஞ்சு மொன்றுண்டன்றோ அதனை விட்
டள்ளிச் சென்றிட்டவேகம் அமரருக்கப்பாலும் போகுமே.

## மருகர்

மாமா! தடுக்குப்பொன் ஈங்கொருவன் இன்னுமே
ஏமாந்து போவானோ பாட்டாவை - ஏம்பா?
பிடித்துவைக்க மாட்டாமே விட்டாயோ என்றால்
தடித்த நெஞ்சோ தாமதமோ கூறு.

## அண்ணை வாழ்த்து:

ஈசன் அடியிணையே தஞ்சமென்றா எந்தம்பீ
நாசம் எவர்க்குமே இல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஆதிபராசக்தி பார்க்க வா... ..."

பாடிப்பழக்கமுமில்லை பரிசு பெற்றதுமில்லை
வாடிய என் உள்ளம் ஆறுதலடைய இப்பாக்கள்
தேடியே ஒப்படைக்கின்றேன் பாட்டி-பிறை
சூடிய அப்பனுரைச் சேர்ந்த பாட்டனுருக்கு......

முதல் கண்ட பேர்த்தி முத்தான பேர்த்தி
இதழ் இது தன்னில் இரங்கல் இவர்க்கு
முதல் உரைக்கக் கிட்டிய தருணத்தில்
நிழல் போல் நினைவுகள் நீளுகின்றனவே......

பாட்டாவைப் பார்த்த நாள் தொட்டு
நாட்டமாய் எதுவும் செய்ய முடியுதில்லை
பாட்டாய்ப் பாடி என் கவலையை
கூட்டாகக் கலைக்கப் பார்க்கின்றேன்... ...

'ஆதிபராசக்திபார்க்கவா' என்று அழைத்து
வீதி எல்லாம் காட்டி விம்மாது பார்த்து
தாதி போலத் தந்தை தாய் வருமட்டும்
பீதியடையாமல் வைத்து இருந்ததை மறப்பேனே......

- வாகினி -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தால் உயர்ந்த உத்தமர்

# அமரர் கே. இ. எஸ்.

எனது அன்புக்குரிய நண்பரும், பழம்பெரும் கூட்டுறவாளரு மாகிய அமரர் திரு. க. இ. சுப்பிரமணியம் அவர்கள் கால மான செய்தி அறிந்து நானும், எனது சகாக்களும் அளவிலாத் துயரத்தில் ஆழ்ந்தோம். அவருடன் பழகிய இனிய காலத்தை எவராலுமே மறக்கமுடியாது. எவருக்கும் மனத்தாலும் தீங்கு செய்ய நினைக்காதவர், இனிமையாகப் பேசுவார், எவருக்கும் தானே முன்வந்து உதவும் சுபாவம் உடையவர். அன்பு ததும் பும் இனியமுகத்தில் விபூதியும், சந்தனமும் தரித்து, சுதேச உடையுடனான அவரின் எளியதோற்றம் என்றும் எமது நினைவை விட்டகலாது. தமிழரின் பாரம்பரியம், பண்பாடு உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கையு டன் செயற்பட்டவர். இதற்கமைய வாழ்ந்து காட்டியவர். குணத்தின் குன்றாக வாழ்ந்து எமது திணைக்களத்தில் சுமார் 35 ஆண்டுகள் வரை சேவைபுரிந்த அவரது சேவைக்காலத்தில் பல கூட்டுறவாளர்களின் அன்பையும், நன்மதிப்பையும் பெற்றவர். கூட்டுறவு உத்தியோகத்தர்களின் சிக்கன கடனுதவிச்சங்கத்தில் தலைவராக நெடுங்காலம் பணியாற்றி தனது சகாக்களுக்கும் அரும்பெரும் சேவையாற்றியுள்ளார். தனது கட்டுப்பாடான வாழ்க்கை முறையால் ஓய்வுபெற்றதன் பின்னரும் இனிது வாழ்ந்து அமரரானார்.

அவரது உயர்ந்த உள்ளத்திற்கேற்ப அவரது வாழ்வும் அமைந்தது. அன்னாரதுபிரிவால் துயருறும் அவரது மனைவி, மரு கள், குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரி வித்து அவரது ஆத்மா இறைவனடி சேரப்பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி!

S. பத்மநாதன்.
கூட்டுறவு, அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
(கணக்காய்வுப் பகுதி),
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பன்னிரு திருமுறை

## 1-ம் திருமுறை

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடுமவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

## 2-ம் திருமுறை

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்திரு வாலவாயான் திருநீறே.

## 3-ம் திருமுறை

உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல்விழி காய்வதுகாமனையே
யற்றமறைப்பது முன்பணியே அமரர்கள் செய்வதும் முன்பணியே
பெற்றுமுகந்தது கந்தனையே பிரம புரத்தை யுகந்தனையே.

## 4-ம் திருமுறை

சலம்பூ வொடுதூப மறந்தறியேன்
தமிழோ டிசைபாடல் மறந்தறியேன்
நலந்தீங் கிலுமுன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வாய்
உடலுள் ளுறுசூலை தவித் தருள்வாய்
அலைந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட் டானத் துறையம்மானே.

## 5-ம் திருமுறை

அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னன் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 ம் திருமுறை

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற்கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன்தானே.

## 7-ம் திருமுறை

பொன்னும் மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போகமுந் திரு வுணர்ப் பானை
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெலாந் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையென றறி யொண்ணு
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழத்தணி
ஆரூரானை மறக்கலுமாமே.

## 8-ம் திருமுறை

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப் பதனல் அடியெனுன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப்புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே என் கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9-ம் திருமுறை

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

மன்னுகதில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

## 10-ம் திருமுறை

அன்புஞ் சிவமும் இரண்டென்பேர் அறிவிலார்
அன்பே சிவமாவ தியாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

## 11-ம் திருமுறை

இடர்களை யாரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் - சுடருருவில்
என்பருக் கோலத் தெரியாடும் என்மானுர்க்
கன்பறா தென்நெஞ் சவர்க்கு.

## 12-ம் திருமுறை

உலகெ லாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

சிரத்தா னத்திற் பணியாதே
 செகத்தோர் பற்றைக் குறியாதே
வருத்தா மற்றொப் பிலதான
 மலர்த்தாள் வைத்தெத் தனையாள்வாய்
நிருத்தா கர்த்த துவம்நசா
 நினைத்தார் சித்தத் துறைவோனே
திருத்தாள் முத்தர்க் கருள்வோனே
 திருக்கா ளத்திப் பெருமாளே.


திருச்சிற்றம்பலம்

## கந்தரலங்காரம்

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமும்
தோளுங் கடம்புமெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

## கந்தரனுபூம்

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பிரமணியர் தாய்வழி:- கதிரேச உடையார் பரம்பரை தெல்லிப்பழை

வைரவநாதர்
\+
சின்னப்பிள்ளை (கதிரேச உடையார் மகள்)

↓

Dr. வன்னித்தம்பி + தெய்வானைப்பிள்ளை

- குமாரசாமி (சட்டத்தரணி) + செல்வம்
  - இராசஇராசேஸ்வரி (கல்லூரிஅதிபர்)
  - வன்னியசிங்கம் MP (சட்டத்தரணி)
  - புவனேஸ்வரி
  - பாலசிங்கம் (CCS) சட்டத்தரணி
- பொன்னுச்சாமி (சட்டத்தரணி)
- பார்வதிப்பிள்ளை + இலங்கைநாயகம் (ஆசிரியர்)
  - (தம்பி) மாணிக்கவாசகர் (சட்டத்தரணி)
  - மகேஸ்வரி
  - சுப்பிரமணியம் + அகிலாண்டேஸ்வரி
    - பவானி + செல்வசிங்கம்
      - பிரணவன்
    - கௌரி
    - மாலினி
    - காயத்திரி
  - கதிர்காமலிங்கம் (அரச சட்டத்தரணி) + மனோன்மணி
    - Dr. லலிதாம்பிகை + ஜெகதீசன்
    - விஜயாம்பிகை
    - Dr. செந்தில்குமார்
    - சிவகுமாரன்
- மீனாட்சிப்பிள்ளை + இளையதம்பி
  - தெய்வகுலக்கொழுந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுப்பிரமணியர் தகப்பன்வழி:- இலங்கைநாயகமுதலிவழி வந்தவரும் மயிலிட்டி வாசியுமான

காசிநாதர் சிற்றம்பலம்
+
தெய்வானைப்பிள்ளை

- சின்னப்பிள்ளை + சின்னக்குட்டி
- கந்தையா + தங்கமுத்து (சுகுணவத்தை)
  - இலங்கைநாயகம் (ஆசிரியர்) + பார்வதிப்பிள்ளை
    - மாணிக்கவாசகர் (தம்பி) (சட்டத்தரணி)
    - மகேஸ்வரி
    - சுப்பிரமணியம் + அகிலாண்டேஸ்வரி
      - பவானி + செல்வசிங்கம்
        - பிரணவன்
      - கௌரி
      - மாலினி
      - காயத்திரி
    - கதிர்காமலிங்கம் (அரச சட்டத்தரணி) + மனோன்மணி
      - Dr. லலிதாம்பிகை + ஜெகதீசன்
      - விஜயாம்பிகை
      - Dr. செந்தில்குமார்
      - சிவகுமாரன்
  - திருநாவுக்கரசு (நடராசா) (சோதிடர்)
- சின்னையா
- எள்ளுப்பிள்ளை + சிவப்பிரகாசம் (கொல்லங்கலட்டி)
- அம்பலவாணர் + வள்ளிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

மருத்துவமும் பொருத்தமதாய்
அரும்பணியும் ஆற்றினோர்க்கும்
இருட்டினிலும் பகலினிலும்
ஏனென்றோர் யாவருக்கும்
அருக்காமல் விருப்புடனே
ஆமென்ற அன்பர்க்கும்
பெருவிருப்பாய் பேரன்பால்
பேசுகின்றோம்
நன்றி! நன்றி!!

மனைவி
மக்கள்
மருகர்
பேர்த்தி
பேரன்

அச்சுப்பதிப்பு:-
"சித்திரா அச்சகம்" 664, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org